# முகாம் தாக்குதல் குறித்து அரசின் தகவல்களை கொழும்பில் உள்ளவர்கள் நம்பத் தயாரில்லை


பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 242 பிரசோற்பத்தி ஆடி 12 ( 28 - 07 - 1991 ) ஞாயிறு


ஆனையிறவு முகாம் தாக்குதல் குறித்து அரச தரப்பில் தெரிவிக்கும் தகவல்களை கொழும்பில் மக்கள் நம்பவில்லை என பி. பி. ஸி. தெரிவித்தது. கொல்லப்பட்ட ஒவ்வொரு இராணுவத்தினருக்கும் பத்து புலிப் போராளிகள் இறந்துள்ளதாக இராணுவ தரப்பினர் கூறுவதை எவருமே நம்புவதாக இல்லை எனவும் பி பி. ஸி. தெரிவித்தது. கடந்த ஆண்டு ஜுன் மாதம் புலிகளுக்கும், ஆயுதப்படையினருக்கும் இடையில் சண்டை மூண்டதின் பின்னர் ஆனையிறவு யுத்தமே மிக மோசமானது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ளவர்கள் ஆனையிறவு சம்பவம் தொடர்பாக கிடைக்கும் தகவல்கள் மூலமாக உண்மை நிலைமையை அறியமுடிகிறது. ஆனையிறவு முகாம் விடுவிக்கப்படும் என இராணுவ அதிகாரிகள் கூறினாலும் எப்போது என்று கூறமுடியாதுள்ளனர். இராணுவம் எதிர்பார்த்த அளவு இந்தச் சண்டையில் வெற்றிபெற முடியவில்லை என ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி கூறியுள்ளார் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப்பகுதியில் இருந்து படையினர் முன்னேற முடியாதுள்ளதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது. இதேவேளை ஆனையிறவு, கட்டைக்காட்டுப் பகுதி மோதலால் காயமடையும் படையினரின் —04 ஆம் பக்கம் பார்க்க

# கட்டைக்காட்டுப் பகுதியில் மீண்டும் போர் மூண்டது

## கவசவாகனம் ஒன்று பலத்தசேதம்

கடந்த ஞாயிற்றுக் கிழமைக்குப் பின்னர் நேற்று நண்பகல் மீண்டும் கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடுமையான யுத்தம் மூண்டது. கனரக வாகனங்கள் சகிதம் படையினர் முன்னேற முயன்றபோதே புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடாத்தினர்.

கடந்த ஞாயிறு புலிகளின் அதிரடித்தாக்குதலால் பல இழப்புக்களுடன் பின்னோக்கிச் சென்ற படையினர் நேற்று விமானக்குண்டு வீச்சுக்களின் உதவியுடன் முன்னேற முயன்றனர்.

நேற்று இரவு வரைசண்டை கடுமையாக நடைபெற்றதாக யுத்த முனையில் இருந்து பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் படையினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் படையின — 4 ஆம் பக்கம் பார்க்க

## போராளிகளுக்கு உணவுப் பொருள்

போராளிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்கும் போது குறுகிய காலத்தில் பழுதடையும் உணவுப் பண்டங்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீண்டநாள்கள் பாவிக்கக் கூடிய மிக்சர், மரவள்ளிக் கிழங்குப்பொரியல், லட்டு போன்றவற்றைக் கொடுத்து உதவுமாறு வேண்டப்படுகின்றனர். (ப 11

## துணைப்படைப் பயிற்சி இன்று சமுகமளிக்கவும்

வலிகாமம் பிரிவைச் சேர்ந்ததுணைப்படைப் பயிற்சி பெற்றவர்களையும், பயிற்சி பெற விரும்புபவர்களையும் இன்று காலை 10 மணிக்கு யாழ் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தரும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. —4 ஆம் பக்கம் பார்க்க

## மாற்றுக் குழுக்களும் படையினருடன் உள்ளனர்

மாற்றுத் தமிழ்க் குழுக்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தற்போது ஈடுபட்டுவருவதாக கொழும்பிலுள்ள இராணுவ உயரதிகாரி தெரிவித்துள்ளதாக அகில இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

—4 ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சி நோக்கி இரவு நேரம் ஷெல் வீச்சு

நேற்றுமுன்தினம் இரவு பலாலியிலிருந்து தென்மராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சாவகச்சேரி தபாலகத்திற்கு அருகில் வீட்டு வளவில் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது.

இதனால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர். எவருக்கும் காயமேற்படவில்லையெனத் தெரியவருகிறது. — 4 ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தில் அனுரா
## இரு வார யுத்தத்தில் படையினர் வெல்லவில்லை

வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றி யதார்த்த பூர்வமான விளக்கத்தை அரசாங்கம் கொண்டிருக்கிறதா எனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

புலிகளுக்கு எதிரான போரில் படையினர் முன்னேற்றம் எதையும் காணவில்லை

இவ்வாறு சுதந்திரக் கட்சி எம். பி அனுரா பண்டார நாயக்கா அவசர காலநிலை நீடிப்பு விவாதத்தில் பேசும் போது பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் இரண்டு வார காலத்தில் இந்தப்போரில் படையினர் — 4 ஆம் பக்கம் பார்க்க

## கர்நாடக முதல்வர்
## காவேரி நீர்ப் பிரச்சினை தமிழகஅரசுடன்பேசத்தயார்

காவேரி நதிநீரை தமிழ் நாட்டுக்கு வழங்குவது குறித்து தமிழக அரசுடன் பேச்சு நடாத்த கர்நாடக அரசு தயாராக இருப்பதாக கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா நேற்று செய்தியாளரிடம் கூறினார்

இப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் நரசிம்மராவ் தம்முடன் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டதாகவும் அவர் சொன்னார்.

இது பற்றி பிரதமருக்கு தாம் விவரமாகக் கூறியதாகவும் முதலமைச்சர் மேலும் கூறினார்.

## பிரிட்டிஸ் அரச வைபவங்களை கொழும்பில் நடாத்தத் தடை

பிரிட்டிஸ் அரசின் முக்கிய கொண்டாட்டங்களை இலங்கையில் கொண்டாடக் கூடாதென லண்டனிலிருந்து கொழும்பிலுள்ள பிரிட்டிஸ் தூதரகத்துக்கு உத்தரவு விடப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பில் நடைபெறும் அரச வைபவங்களிலும் பிரிட்டிஸ் தூதரக அதிகாரிகளை கலந்து கொள் — 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு முகாம் மீது தாக்கு ஒரு காவலரண் முற்றாகச் சேதம்

ஆனையிறவு முகாம் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் பகுதியில் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றும் நேற்று முன்தினமும் விடுதலைப்புலிகள் பிரதான முகாம் மீதும் காவலரண்கள் மீதும் கடும் தாக்குதல் தொடுத்தனர் இதில் ஒரு காவலரண் முற்றாகச் சேதமானது.

குண்டு வீச்சு விமானங்களும் கடும் தாக்குதல்களை நடாத்த புலிகள் சளைக்காது தமது தாக்குதலை படையினருக்கு எதிராக மேற்கொண் — 4 ஆம் பக்கம் பார்க்க

## இரு நாள்கள்வான்தாக்குதல் மேலும் பல வீடுகள் சேதம்

நேற்றும், நேற்று முன்தினமும் ஆழியவளை கிழக்கு, கட்டைக்காடு, செம்பியன் பற்று, நித்தியவெட்டை கேவில், சோரன்பற்று பகுதிகளில் கடுமையான வான் தாக்குதல்கள் இடம்பெற்றன

பொம்மர்கள், ஹெலிக்கப்டர்கள் இங்கு மாறி மாறித் தாக்குதல்களை நடாத்தியதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முதலில் சேதமான வீடுகள் உட்பட மேலும் — 4 ஆம் பக்கம் பார்க்க

## ஐ. நா. சபை விசேட கூட்டம்.
## ஈராக் மீது மீண்டும் இராணுவ நடவடிக்கை?

ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை தொடருவது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது.

ஈராக் தனது அணுவாயு — 4 ஆம் பக்கம் பார்க்க

## செங்கலடி - சித்தாண்டியில் மோதல் 7 படையினர், ரெலோ உறுப்பினர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஏழு இராணுவத்தினரும், ஒரு ரெலோ உறுப்பினரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை செங்கலடிக்கும், சித்தாண்டிக்கும் இடையில் ரயில்ப் பாதையூடாக ரோந்து வந்த படையினர் மீது புலிகள் வழிமறித்துத் தாக்குதல் தொடுத்த போதே இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறின.

இதில், மேலும் சில படையினரும், ரெலோ உறுப்பினர் — 4 ஆம் பக்கம் பார்க்க

## வேலணையில் பெண் கொலை கணவன் உட்பட இருவர் கைது

வேலணை அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் இளம் பெண் மணி ஒருவர் கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள பள்ளிவாசவில் — 4 ஆம் பக்கம் பார்க்க

★ ரஷ்யப் பொருளாதார நிபுணர் கருத்து:

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை பொருளாதாரத் தீர்வு சாத்தியமில்லை!

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு யதார்த்த பூர்வமான ஒரு தீர்வு காணப்படும் வரை பொருளாதாரத் தீர்வுக்கு அரசு எடுக்கும் முயற்சிகள் பலனளிககாது என ரஷ்ய பொருளியல் நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மத்தியவங்கி வெளியிட்ட 1990 ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த நிபுணரின் மதிப்பீடு அண்மையில் மாஸ்கோ வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

மத்தியவங்கியின் அறிக்கையின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் முன்னைய 5 ஆண்டுகளைவிட அதிகரித்துள்ளது. இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகரித்ததினாலும், துணி உற்பத்தி, உல்லாசப் பயணிகள் வருகை, அந்நிய மூலதனவருகை அதிகரிப்புக்களினாலும் சுதந்திர வர்த்தக வலயம் போன்ற திறந்த பொருளாதாரக் கொள்கைகளினாலும் இந்த நிலைமை எட்டப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு யதார்த்த பூர்வமான தீர்வு எட்டப்படும் வரை பொருளாதார வளர்ச்சி பூரண பலனையளிக்க மாட்டாது என அந்த ரஷ்ய நிபுணர் தெரிவித்துள்ளார்.

## சட்டநெறி இன்று ஆரம்பமாகும்

திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் சட்டமாணி நெறி பயிலும் மட்டம் III மாணவருக்கான வகுப்புக்கள் இன்று தொடக்கம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

## பிரிவு அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவு மேலும் மூன்றால் அதிகரிக்கப்படவுள்ளன.

உடுத்துறை, குடாரப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளே மேலும் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளால் அதிகரிக்கப்படவுள்ளன. (50)

எதிரியின் எண்ணிக்கை கூடவாக இருக்கலாம். எண்ணிக்கைதான் பலம் என்பதில்லை. உண்மையான பலம் மன வலிமையும், மனோதிடமுமே!

## இந்தப் பொடியள்

"இவங்கள் - இந்தப் பொடியள்; என்ன பின்னனி இவங்களுக்கு! எங்களைப் போலப் பட்டம், படிப்பு, எங்களைப் போலக் குலம், குடி, பணம், பாரம்பரியம் ஏதாவது உண்டா?'' இது ஒரு கணிப்பு.

"இவங்கள் எத்தனை பேர், சிறிய எண்ணிக்கை. நாங்கள் உலகிலேயே நான்காவது இடத்தைப்பெறும் தரைப்படை எழுபத்து இரண்டு மணித்தியாலத்தில் எல்லாம் முடித்து விடுவோம்''

இது அன்று அவர்கள் நினைத்துச் செருக்கியது. இன்று, இவர்கள் பாகிஸ்தானின் படைக்கலன்கள், சீனாவின் புதுரக விமானங்கள், சக்திவாய்ந்த குண்டுகள், காட்டிக் கொடுக்கும் கையாட்கள்; நாமோ லட்சம். அவர்களோ சில ஆயிரம்; இப்படிச் செருக்கிக் கொள்கிறார்கள்.

இப்படித்தான் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும் இளைஞன் பொடியன் என்று அவன் எதிரிகள் நினைத்தார்கள்.

அதனைச் செவியுற்ற செழியன் சிரித்துக் கொண்டே சொன்னான்; அப்படியா? அவர்கள் அனுதாபத்துக்குரியவர்கள் - அவ்வளவுதான்.

'படுமணி இரட்டும் பாவடிப் பணைத் தாளையுடைய நெடு நல் யானையும் தேரும் மாவும் படை அமை மறவரும் உடையல் யாம்' எனத் தம்மைப் பற்றிப் பெருமிதம் கொண்டு இளையவன் இவன் என என்னைப் பற்றி இழித்துச் சொல்லும் அவர்களிடம் எனக்குச் சினம் எழவில்லை; மாறாகச் சிரிப்பு எழுகின்றது. அவர்கள் நகுதக்கனர், என் அனுதாபத்துக்குரியவர்கள். ஏனெனில் அவர்களுக்கு வரப்போகும் இழப்புகளை அவர்கள் அறியவில்லை. அறிந்தால் என்னை இகழ மாட்டார்கள்.

எமது உறுதுப்பை எமது பெரிய உள வலிமையை அவர்கள் அறியார்கள். அதனால் உடல் சினம் செருக்கிச் சிறுசொல் சொன்னார்கள். எமது உளச்சினத்தின் வலிமையை அவர்கள் அறியார்கள். அங்ஙனம் சிறுசொல் சொல்லிய வேந்தரை அருஞ்சமம் சிதையத்தாக்கி முரசமொடு ஒருங்கு அகப்படுத்தாவிடில், என்னை நம்பிய தமிழினம் இவன் கொடியன் என என்னைத் தூற்றட்டும்! மாங்குடி மருதன் முதலான சிறந்த புலவர்கள் என்னைப் பாடாது ஒழியட்டும்! இரப்பவர்க்குக் கூட ஒன்றையும் கொடுக்க முடியாத ஏழையாக என்னை உலகு பழிக்கட்டும்! என வஞ்சினம் உரைத்தான் அந்த இளைஞன்.

தலையாளங்கானம் என்னும் போர்க்களத்திலே சொன்னவண்ணம் எதிரிகளை வென்று வெற்றிவாகை சூடினான் அவன் எனப் புறநானூறு கூறுகின்றது.

கலாநிதி க. ந. வேலன்

## 250 கிலோ தங்கத்தைப் போர்த்துக்கல் இந்தியாவிடம் ஒப்படைக்கும்

போர்த்துக்கல் தான் எடுத்துச் சென்ற 250 கிலோகிராம் தங்கத்தை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு இணங்கியுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை போர்த்துக்கல் தலைநகர் லிட்பனில் நடைபெறும் வைபவமொன்றில் இத்தங்கம் இந்திய வெளிநாட்டு இணை அமைச்சரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கோவா விடுதலை பெற்ற போது அங்கிருந்து தப்பி ஓடிய முன்னைய போர்த்துக்கல் ஆட்சியாளர்களினால் இத்தங்கம் போர்த்துக்கல்லுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

## ஆண்டுவிழா ஒத்திவைப்பு

நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் 41 ஆவது வருடாந்த ஆண்டுவிழா இம்மாதம் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஆண்டு விழா மறுஅறிவித்தல்வரை பின்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வைத்தீஸ்வரா முன்மாதிரி

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பெருந்தொகைப் போர்க்கால உதவிப் பொருள்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் பிரதேசப் பொறுப்பாளர் கமல் மாஸ்ரரிடம் மேற்படி பாடசாலை அதிபரினால் கையளிக்கப்பட்டன. (74)

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்க்கு பயிற்சி

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான 'பொம்மலாட்டம்' சேவைக்காலத் தொழில்நுட்ப செயலமர்வுப் பயிற்சி 3 நாள்களுக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

நேற்று 27ஆந் திகதி தொடக்கம் 29ஆந் திகதி வரை ஆண்டு ஒன்று தொடக்கம் 5 வரை அழகியல், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி நடைபெறும். (ப-10, 32)

## 'ஆதாரம்'

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சமூக, விஞ்ஞான, பொருளாதார, ஆய்வு இதழான ''ஆதாரம்'' என்னும் சஞ்சிகை இரு மாதத்திற்கு ஒரு தடவை வெளிவருகிறது. இது பல பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்பக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. தற்பொழுது மூன்றாவது இதழ் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாகவும், தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் ஊடாகவும் விற்பனை ஆகின்றது. இவ் இதழை வாங்க விரும்புவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் அல்லது தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிளைகளில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'உணவுப் பற்றாக்குறையை நீக்க உடன் நடவடிக்கை அவசியம்'

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் உணவுப்பொருள்களைப் பாகுபாடற்ற நிலையில் வழங்க யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

கடந்த பல மாதங்களாகவே யாழ் குடாநாட்டில் உணவுப் பற்றாக்குறை மோசமாகவே இருந்து வந்துள்ளது. இப்படியான நிலையில் ஆனையிறவு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபின் தரைவழி, கடல்வழியாகவும் தடை செய்யப்பட்டு அரச விநியோகமோ அல்லது தனியார் துறை விநியோகமோ இல்லாது மக்கள் உணவுப் பொருள்களுக்காக அலைகிறார்கள்.

தற்போதைய நிலையை ஆராய நடவடிக்கை எடுக்காது 27.07.1991 இல் நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் விநியோகம், உணவு சம்பந்தமான செயலகக் கூட்டம் மறுதிகதி குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் கப்பல் வருகின்றது என்று திருப்திப்படுவதைத் தவிர்த்து கடந்த 15 தினங்களாக சகல வழிகளிலும் உணவு விநியோகம் தடைப்பட்டிருந்தமையை கவனத்தில் எடுத்து சகல மக்களுக்கும் அடுத்த இரண்டு வாரங்களுக்கான உணவுப் பொருள்களை பாகுபாடற்ற நிலையில் வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ் குடாநாட்டு மக்களின் நிலையை கவனத்தில் எடுத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கப்பல்களைத் தருவிக்க நடவடிக்கை எடுத்தது போன்று அரசாங்க அதிபர் அடுத்த இரண்டு வாரங்களுக்கு சகலருக்கும் நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
விவசாயபீடம்

விவசாய பீட இரண்டாம் அரையாண்டின் இறுதிப் பகுதி விரிவுரைகள் 05. 08. 91 இல் கிளிநொச்சியிலுள்ள விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

மாணவர்கள் அனைவரும் 04. 08. 91 இல் கிளிநொச்சி விவசாய பீட விடுதிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

07111 பதிவாளர்.


## இசைமரபின் எல்லைகள் விரிவடைகின்றன

-கா. சிவத்தம்பி

''தமிழிசைப் பாரம்பரியத்தில் தவில் - நாதஸ்வரம் முக்கிய இடம் வகிக்கிறது. இன்று இங்கு அமரர் சின்னராசா பேரால் செய்யப்படும் நாதோபாசனை மனித வாழ்க்கையினூடே மரபு பேணப்படுவதையும் எமது இசைப்பாரம்பரியத்தின் எல்லைகள் வலிவடைவதையும் காட்டுகிறது.''

காலஞ்சென்ற தவில் மேதை என். ஆர். சின்னராசாவுக்கு நேற்று முன்தினம் இணுவில் ஸ்ரீபரராச சேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் அவர் மக்கள் ரவீந்திரனும் சுதாகரனும் செய்த அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கவிஞர் சோ பத்மநாதன் தமது உரையில், 'அமரர் சின்னராசாவுக்கு அவர் மைந்தர்கள் நாதாஞ்சலி செய்ததில் வியப்பில்லை. அவர் தலை மாணாக்கர் கே.ஆர்.புண்ணியமூர்த்தி இசைக்காணிக்கை செய்தது கூடப் புதினமில்லை. ஆனால் முன்னணி வித்துவான்களாகிய கே. ஆர். சுந்தரமூர்த்தி, வி.கே.கானமூர்த்தி—பஞ்சமூர்த்தி சகோதரர்கள் ஒரு சக கலைஞனுக்கு ஆத்மார்த்தமாகச் செய்த அஞ்சலி எம்மைச் சிலிர்க்கவைக்கிறது. அரூபமாக இங்கு இருக்கும் அமரர் சின்னராசா தாம் நட்ட இசைப்பயிர் நன்கு வளரும் என்று திருப்தி அடைவார். அதுவே அவரடையும் ஆத்ம சாந்தி ஆகும்' என்றார்.

இயலிசை வாரிதி ந.வீரமணிஐயரும், கம்பன் கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ் ஆகியோரும் பேசினர்.

## தேனீ வளர்ப்பு

இயற்கையான முறையில் பல்வேறு இடங்களில் பொந்துக்களில் வாழும் பொந்துத் தேனீக்கள், செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட தேனீ வளர்ப்புப் பெட்டிகளில் மாற்றீடு செய்யப்பட்டு வீட்டில் வசதியான இடத்தில் வளர்க்கத்தக்கவாறு ஒழுங்கு செய்யப்படுகின்றது.

உங்கள் கிராமங்களில் இயற்கையான பொந்துக்களில் தேனீக்கள் கூடுகட்டி இருந்தால், தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்களிடமோ அல்லது தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் விவசாயப் பகுதியினரிடமோ அறியத்தருமாறு தமிழீழஆய்வுநிறுவனம் கேட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டு எரிபொருளுக்குத் தேவையான கொத்து விறகு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வீட்டுத் தளபாடங்களும் சிறந்த முறையில் நவீனமாக செய்து தரப்படும். உரிமையாளர் ம பாலச்சந்திரன், சந்திரவதனி தச்சுத்தொழிற்சாலை, பலாலிவீதி, திருநெல்வேலி. 07109

### கல்வி

G. C. E. (O/L)- இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 24 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திர வீதி, சுண்டுக்குளி 07110

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

வீரஜனனம் 1969 - 02 07

வீரமரணம் 1991 - 06 14

2ஆம் லெப்டினன்ட் அருணா
(சின்னையா - நவமணி)

அகல் விளக்கு அணைந்து
ஆனது மாதம் ஒன்று
நினைவு எம் நெஞ்சோடு
தொடருமே வாழ்நாள் வரை.

உன் ஆத்ம சாந்திக்காக நினைவு கூரும்
அம்மா, அண்ணாமார், அக்காமார்,
மைத்துனர்கள், மகன்மார்

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

07112

★ பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

# தமிழீழத்திற்குக் குறைவாக எதனையும் புலிகள் ஏற்பதற்கு தயாராக இல்லை!

தமிழ்ஈழத்தைத் தவிர வேறு எதனையும் ஏற்க விடுதலைப் புலிகள் தயராகவில்லை என பிரதமர் டி. பி. விஜேதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு பதிலளித்தும் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்குறிக்கோளுக்குக் குறைவாக அரசுடன் பேச்சு நடாத்தவும் புலிகள் தயாராக இல்லை எனவும் பிரதமர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## உதவிப் பணக் கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ளவர்களுக்குப் பொதுசன மாதாந்த உதவிப் பணமும், புற்றுநோய், கசம் ஆகியவற்றிற்கான உதவிப் பணமும் உடனடியாக வழங்கப்படவுள்ளன. முள்ளியான், ஆழியவளை, மருதங்கேணி ஆகிய உப அஞ்சல் அலுவலகங்களில் இதுவரை பணம் பெற்றோர், ஆழியவளை கிராம சேவையாளரின் செம்பியன்பற்று இல்லத்தில் நாளை திங்கள் காலை 9 மணிக்குத் தமது பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். புதன்கிழமை காலை 9 மணிக்கு நாகர்கோவில் உப தபாற் கந்தோரிலும், வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் குடத்தனை உப தபாற் கந்தோரிலும் பணம் வழங்கப்பட உள்ளது. (43)

## இடம்மாறும் நூலகம்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மல்லாகத்தில் இயங்கி வந்த தெல்லிப்பழை பொது நூல் நிலையம் தற்போது மீண்டும் அளவெட்டி மகாஜன மண்டபத்திற்கு இடமாற்றப்பட்டு இயங்குகின்றது.

எதிர்வரும் 01-08-91 தொடக்கம் நூல் நிலையத்தின் இரவல் கொடுக்கும் பகுதி, வாசிப்புப் பகுதி என்பனவும் செயற்பட உள்ளன. அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தினைப் புதுப்பித்துக் கொள்வதோடு முன்பு இரவல் வாங்கிய நூல்களையும் விரைவில் கையளிக்குமாறும் நூலகர் கேட்டுள்ளார். (ப-10)

## பூநகரி பாடசாலைகள் ஆரம்பம்

பூநகரி கொத்தணிப் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளும் நாளை 29 ஆம் திகதி திங்கள் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களையும், கடமையாற்றும் சகல அதிபர், ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பூநகரி கொத்தணி அதிபர் கேட்டுள்ளார். (ப-35)

## 18 மீனவர்களும் விடுதலை

மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்படவுள்ளதாக மாலைதீவு அரசு அறிவித்துள்ளது.

மாலைதீவு கடற் பிராந்தியத்தில் சட்டவிரோதமாக மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்தத் தென்பகுதி மீனவர்கள் கைது செய்யப்பட்டும் பல மாதங்களாக மாலைதிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (74)

## பல ஆலயங்கள் சேதம்

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ நடவடிக்கையின்போது கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா தேவாலயம், வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் உட்பட நூற்றுக்கணக்கான வீடுகளும்] சேதமடைந்துள்ளன. கடற்படைக் கப்பல்களின் பீரங்கித் தாக்குதல்களினாலும், விமானப்படை விமானங்களின் குண்டு வீச்சுக்களினாலுமே இப்பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. (43)

## புகலிடம் வழங்கப்படாத தமிழர்கள் வருட இறுதிவரை தங்க அனுமதி

ஜேர்மனியில் புகலிடம் வழங்கப்படாத நிலையில் நாட்டை விட்டு வெளியேற உத்தரவு வழங்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் இவ்வருட இறுதிவரை அங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வருட இறுதிக்குப் பின்னர் இவர்களை வெளியேற்ற ஜேர்மன் அரசு குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு அதிகாரமளித்துள்ளது.

## படையினரிடம் சிக்கிய 6 பொதுமக்கள் சுட்டுக்கொலை!

வெற்றிலைக்கேணியில் கடந்த 14ஆம் திகதி படையினர் தரையிறக்கப்பட்ட போது அவர்களிடம் சிக்கிக் கொண்ட பொதுமக்களில் ஆறுபேர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மிருதி இவர் உயிருடன் தப்பிவந்து சேர்ந்துள்ளனர். பரமானந்தம் சின்னப்பிள்ளை 46) நாகம்மா (57) மாலினி (12) ஜெயந்தினி (10) ஜனகன் (8) திவாகரன்(5) ஆகிய அறுவருமே படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டவர்கள் ஆவர். (43)

## இந்தியாவில் வரிஏய்ப்பு தீவிரமடைகிறது! 80 ஆயிரம் கோடிருபா கறுப்புப்பணம்

இந்தியாவில் 80ஆயிரம் கோடிரூபா கறுப்புப்பணம் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் இவ்வளவு தொகையாக கறுப்புப்பணம் இருப்பது இதுவே முதற் தடவையெனவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பலர் வரிசெலுத்தாமல் 'டிமிக்கி' விட்டு வருவதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தடைமுகாம் வழியாகப்பொருள்களை எடுத்துவர மேலும் கட்டுப்பாடு

வவுனியா தடைமுகாம் வழியாகப்பயணிகள் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு தற்பொழுது பலத்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் இரண்டு கட்டி சன்லைட்டுக்களையும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யும்மட்டுமே தடைமுகாம் வழியாக வடக்கே எடுத்துவர அனுமதிக்கப்படுகின்றார்

மேலதிகமாக இப்பொருள்களை எடுத்து வருவோர் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள். (ப-35)

## 'சர்வகட்சி மகாநாட்டினால் இனப்பிரச்சினை தீரப்போவதில்லை'

இனப்பிரச்சினை இந்நாட்டின் தொடர்கதையாகிவருகிறது. இந்த நிலை நல்லதல்ல சர்வகட்சி மகாநாடும் தொடர்ந்து கொண்டே போகிறது

சர்வகட்சி மகாநாட்டினால் இப் பிரச்சினை தீராது.

இவ்வாறு சுதந்திரக் கட்சி அநுராதபுர மாவட்ட எம் பி கே பி. இரத்நாயக்கா பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் இனப்பிரச்சினையை தேசியப் பிரச்சினையாகக் கருதவேண்டும் சகல இனத்தவர்களதும் பிரதிநிதிகளை உள்ளடக்கி இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

அரசியல் பேதங்களை மறந்து இப்பிரச்சினையை ஆராயவேண்டும். வருடங்கள் பல செல்கின்றன இப்பிரச்சினை தீருவதாக இல்லை.

இப்படியே எத்தனை வருடங்கள் கழிக்கப்போகின்றோம். இவ்வளவு காலமும் பட்டகஷ்டங்கள் போதும் இனியும் கஷ்டங்களை அனுபவிக்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார். 33

## புனரமைப்புக்கு வழங்கப்படும் கடன்கள் 2 மடங்காக அதிகரிப்பு!

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள், இயந்திரங்கள் என்பவற்றை திருத்தி அமைக்க வழங்கப்பட்டுவரும் கடன்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வீடுகளைப்புனரமைக்க இதுவரை ஒன்றரை லட்சம் ரூபாவே கடனாக வழங்கப்பட்டுவந்தது. இத்தொகை இரண்டரை லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 6 சதவீத வட்டியுடனான இக்கடன் 15 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

வர்த்தக நிலையங்கள், இயந்திரங்களைப் புனரமைக்க வழங்கப்படும் இரண்டரை லட்சம் ரூபா கடன் 5 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 9 சதவீதவட்டியுடன் 10 வருடகாலத்தில் இக்கடன் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோர் உதவி அரச அதிபர்களின் சிபாரிசுடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவற்றின் மூலம் இக்கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகின்றது.

## ரஷ்ய மொழியிலும் 'ரீடேஸ் டைஜெஸ்ட்'

உலகில் மிகவும் பிரசித்திபெற்ற சஞ்சிகையான 'ரீடேஸ் டைஜெஸ்ட்' இவ்வாண்டு யூலை மாதம் தொடக்கம் ரஷ்ய மொழியிலும் வெளியிடப்படுகிறது. முதற் பதிப்பிலேயே ஐம்பதாயிரம் பிரதிகள் விற்பனை ஆகியுள்ளன.

'ரீடேஸ் டைஜெஸ்ட்' அதன் ஆரம்ப காலம் தொட்டு சமீப காலம் வரை ரஷ்ய எதிர்ப்புக் கட்டுரைகளையே அதிகமாகப் பிரசுரித்து வந்ததினால் அண்மைக்காலம் வரை இச் சஞ்சிகைக்கு 'ரஷ்ய' அரசு தடைவிதித்திருந்தது. இப்பொழுது அத்தடையை நீக்கியதுமல்லாமல் அச் சஞ்சிகையின் ஆங்கிலப்பிரதியை எந்தவித தணிக்கையுமின்றி ரஷ்ய மொழியில், மொழி பெயர்க்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1963 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஆரம்பிக்கப்பட்ட மாத வெளியீடான இச் சஞ்சிகை தற்பொழுது ரஷ்ய மொழிஉட்பட 19 பல்வேறு மொழிகளில் 2 கோடி 80 லட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் ஒவ்வொரு மாதமும் அச்சிடப்பட்டு உலகெங்கும் விற்பனை செய்யப்படுகிறது (16)

## நேபாளத்தில் வயிற்றோட்டத்துக்கு 7 வாரங்களில் 400 பேர் பலி!

நேபாளத்தில் வயிற்றுப் போக்கு வேகமாகப் பரவி வருவதாக வெளிநாட்டுச் செய்திச் சேவைத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த 7 வாரங்களில் மட்டும் அங்கு வயிற்றுப்போக்குக் காரணமாக 400க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

## அமெரிக்க யுத்த விமானங்கள் பம்பாயில் திடீர் தரை இறக்கம்!

கடந்த மாதம் மூன்று அமெரிக்க யுத்த விமானங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பம்பாய் விமான நிலையத்தில் திடீரென இறங்கிச் சென்றமை குறித்து இந்திய அரச உயர் மட்டத்தில் ஆராயப்படுகின்றது.

இந்த விமானங்கள் எங்கிருந்து வந்தன, ஏன் வந்தன என்பது பற்றி விமான நிலைய அதிகாரிகளுக்கும் தெரியவில்லை, 33

## அடையாள அட்டை புதுப்பித்தல்; செயலகத்துக்கு தகவல் எதுவும் இல்லை

1972 - 73 ஆம் ஆண்டுகளில் விநியோகம் செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் புதுப்பித்தல் தொடர்பாக கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து இதுவரை எதுவித அறிவித்தலும் தமக்குக் கிடைக்கவில்லையென்று யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிராந்தியப் பொறுப்பாளர் தெரிவிக்கின்றார்.

அண்மையில் 1972/73 ஆம் ஆண்டுகளில் விநியோகம் செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் காலாவதியாகிவிட்டன என்றும் இவற்றைப் பெற்றவர்கள் அவற்றைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இலங்கை வானொலி செய்தியை ஒலிபரப்பியமை தெரிந்ததே.

## நடுக்கடலில் கப்பலில் தீ! இலங்கைத் தமிழர் பலி!!

கடந்த மாதம் ஐந்தாம் திகதி 'பப்ரிபவர்' என்ற கப்பலில் இருந்து காணாமல் போன அக்கப்பலின் மாலுமியான இலங்கைத்தமிழரான இராசையா பாலன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இக்கப்பல் நடுச்சமுத்திரத்தில் எரிந்ததாகவும் அதனை ஸ்பெயின்தேச கப்பல் ஒன்று டுபாய் துறைமுகத்துக்கு இழுத்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலின் இயந்திரப் பகுதியில் தீப்பற்றியதாகவும் அதற்குள் பாலனின் சடலம் கருகிய நிலையில் இருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## பொருளாதார உடன்படிக்கை

இந்தியாவுடன் புதிதாக பொருளாதார உடன்படிக்கையொன்று செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்,

இது தொடர்பான ஆரம்பப் பேச்சுக்களை இரு தரப்பினரும் வெற்றியுடன் ஏற்கனவே முடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 1229 நிலையங்களில் பரீட்சை: 1லட்சத்து 57ஆயிரம் பேர் தோற்றுவர்

ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ த. உயர்தரப் பரீட்சைக்குவடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமிருந்து ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர்.

மொத்தம் 1229 நிலையங்களில் இப்பரீட்சை நடாத்தப் படவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'சத்துரட்ட'வுக்கு நிதி வழங்குகிறதாம்

தென்பகுதியில் தற்பொழுது இயங்கி வரும் 'சத்துரட்ட மக்கள் முன்னணி' என்ற அமைப்புக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிதி உதவி வழங்கி வருவதாக அரசு குற்றம் சாட்டியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத்தில் அறிக்கைவிடவேண்டுமென ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையிற் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மஹர சிறைச்சாலை விடுதி பொலிஸார் தேடுதல்

மஹர சிறச்சாலைப்பகுதியில் உல்லாச விடுதி ஒன்று இயங்கிவந்ததை இரகசியப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்

இந்தச் சிறைச்சாலைப் பகுதியிலுள்ள சிறைக்காவல் உயர் அதிகாரிகள் விடுதி ஒன்றிலேயே இது நடைபெற்றதாகவும் பொலிஸார் தெரிவிக்கிறனர். 33

## வேங்கை வாஞ்சியின் மகன் வெற்றிலைக்கேணியில் வீர மரணம்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கவிஞரும் போராளியுமான வே. மு. வாஞ்சிநாதனின் ஒரே மகனான இளஞ்செழியன் வெற்றிலைக்கேணியில் நடைபெற்று வரும் நேரடி மோதலில் வீர மரணம் அடைந்துள்ளார்.

இவரின் இறுதிக் கிரியைகள் வடமராட்சி மாவீரர் மயானத்தில் இராணுவ மரியாதையுடன் இடம்பெற்றன.

அதற்கு முன்னர் புகழுடல் புற்றளை மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலி உரையும் இடம்பெற்றன. 39

## தென்பகுதி மாணவர்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி தென்பகுதி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான விஞ்ஞான உபகரணங்களை வழங்கியுள்ளது

கடந்த பத்து வருடகாலத்தின் பின்னர் விஞ்ஞான உபகரணங்களை ஆசிய அபிவிருத்திவங்கி வழங்கியதுஇதுவே முதற்தடவை என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

தென்பகுதியில் உள்ள 92 பாடசாலைகளுக்கு முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரமாணவர்களுக்கு தொகுதி ரீதியாக விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை வடகிழக்குப் பகுதி மாணவர்களின் கல்விக்கு வெளிநாட்டு அரச மற்றும் வங்கிகளின் உதவிகள் கடந்த காலங்களில் கிடைக்கவில்லையெனத் தெரியவருகிறது. (ப- 11)

### ஒரே முறையில் 3 முட்டைகள் இட்ட கோழி

பொலிகண்டி கொற்றாவத்தையில் ஒருவருடைய வீட்டில் கோழி ஒன்று ஒரே சமயத்தில் மூன்று முட்டைகளை இட்டுள்ளது. இச்சம்பவம் கொற்றாவத்தை கா. கிருஸ்ண பிள்ளை என்பவரின் வீட்டில் சென்ற வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. மூன்று முட்டைகளும் ஒரே அளவாக இருந்ததாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. 79

### செங்கலடி...

களும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஒரு குழந்தை உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது ப-11

### இருவார...

வெற்றி அடைவார் என அரசாங்கம் கூறியது. ஆனால் இன்றும் இராணுவம் இதுவரை எதையும் சாதிக்கவில்லை. 33

### ஈராக்...

தங்கள் பலவற்றை இன்னமும் மறைத்து வைத்திருப்பதாக அங்கு சென்ற ஐ நா நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த முதல் மூன்று வருடங்களுக்கு அணுவாயுதங்களை வழங்க பிரிட்டன் சம்மதித்ததாக லண்டனில் வெளியான அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

### இருநாள்...

பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

காலை ஆறுமணியிலிருந்து தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். 79


குறிஞ்சி மருந்தகம்

KURINCI PHARMACY

இல. 3, நவீன சந்தை,
திருநெல்வேலி.

எங்களிடம்

சகல விதமான தரமான
ஆங்கில மருந்து வகைகள்
பால்மா வகைகள், பிஸ்கட், இனிப்பு வகைகள்,
குளிர் பானங்கள், மாஜரின். பட்டர். முட்டை
மற்றும்
அன்பளிப்புப் பொருட்கள்
முதலியன நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பிற்குறிப்பு;- எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

வாடிக்கையாளர் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

நன்றி

07108


★ கருத்தரங்கில் அரவிந்தன்

## யுத்த முனைக்குச் செல்லும் மன நிலையைப் பெறவேண்டும்

வீரமரணமடைந்த போராளிகளினதும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் இன்று எமது முகாம்களில் ஏராளமாகக் கிடக்கின்றன

இந்த ஆயுதங்களை ஏந்தி யுத்த முனைக்குச் செல்லும் மனநிலையை மாணவர்கள் பெறவேண்டும்

இவ்வாறு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் வே. அரவிந்தன் கடந்த வெள்ளிக்கிழமை அச்சுவேலி, வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

வட தமிழீழத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது நாம் பாரிய முற்றுகைத் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

எதிரியானவன் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து புலிகளின் முற்றுகையில் இருந்து தப்பித்துக் கொள்ள முயல்கின்றான்.

இந் நிலையில் தான் விடுதலைப் புலிகளின் வரலாற்றுப் போரை சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த முற்றுகைப் போர் வெற்றி பெற தேவையான முழுமையான பங்களிப்பை அனைவரும் ஆற்ற முன்வர வேண்டும்.

யுத்த முனைக்குச் சென்று இராணுவ நடவடிக்கைகளில் நேரடியாக உதவுவதுடன் காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கவும் நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார் ப 11

### காங்கேசன் ம. வி. மாணவர்களுக்கு

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் இயங்கிய காங்கேசன்துறை மகாவித்தியாலயம் நாளை 29ஆம் திகதி திங்கள் முதல் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கும் என கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்-

சகல காங்கேசன்துறை மகா வித்தியாலய மாணவர்களையும் காலை 8-15 மணிக்கு இங்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் (ப 11)

### வர்த்தகர்கள் தமிழகத்தில் கைது

தமிழ் நாட்டில் இராமேஸ்வரத்தில் கடை ஒன்றை நடாத்தி வந்த இரு இலங்கைத் தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கைக்கு சில பொருள்களைக் கடத்த முயன்றதாகவும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பாகவும் கடத்தல் தொடர்பாகவும் தஞ்சாவூர் தேத்தக்குடி கிராமத்தின் பிரபல வர்த்தகரான எஸ் கோவிந்தராஜனை மத்திய புலனாய்வுத் துறையினர் கைதுசெய்துள்ளதாகவும் 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (33)

### வீரமரணம்

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று நடைபெற்ற நேரடி மோதலில் வீரவன் (சிவன்சந்திரன் - சீனன்குடா திருமலை) வீரமரணமடைந்துள்ளார்.

### விநியோகிக்கப்படாத தபால் பொதிகள் மீட்பு

கொழும்பு பிரதம தபாலகத்திலுள்ள தபால் தரம்பிரிக்கும் பரிவர்த்தனை நிலையத்திற்கு தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் ஏ. எம். அதிகாரி திடீர் விஜயம் மேற்கொண்ட பொழுது பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த தபால்கள் அடங்கிய பல பொதிகளை ஒரு மூலையில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தபால் பொதிகள் சுமார் ஒரு மாதங்களுக்கு மேலாக அங்கிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை இவ்வாறு இருந்ததின் காரணம் பற்றி தமக்கு விளக்கம் தருமாறு தபால் திணைக்கள உயர் அதிகாரிகளை அமைச்சர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக சில தபால் ஊழியர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

### தென்மராட்சி

இதேபோல காரைநகரிலிருந்து பொன்னாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (33)

### மாற்றுக்...

இதே வேளை கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் படையினருடன் மாற்றுக் குழுக்களும் சிவில் உடையில் ஆயுதம் தாங்கி போராடுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ப-11

### துணைப்படைப்...

இத் தினத்தில் சமுகமளிக்கத் தவறுவோர் 29 ஆம் திகதி திங்கள் நண்பகல் 12 மணிக்கு இச் செயலகத்திற்கு சமுகம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தென்மராட்சி பிரிவைச் சேர்ந்த துணைப் படைப் பயிற்சி பெற்றவர்களும், பெற விரும்புவோரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சமுகம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இத்தினம் சமுகமளிக்கத்தவறுவோர் 30 ஆம் திகதி 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு சமுகம் கொடுக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படைசிப்பாயின் சடலத்தில் தாலிக்கொடியும் இருந்தது!

வேலணைத் துறைக்கு அருகில் கடலில் மிதந்துவந்த இரு கடற்படைச் சிப்பாய்களின் சடலங்களில் ஒன்றில் கழுத்தில் தாலிக்கொடி ஒன்று இருக்கக் காணப்பட்டது.

கடந்த வாரம் புங்குடுதீவில் ஆறு சடலங்களும், வேலணையில் இரண்டு சடலங்களும் கரை ஒதுங்கியுள்ளன. இவை கடற்படை சீருடையில் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மண்டைதீவு கடற்கரையிலும் உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் ஒதுங்கியுள்ளது.

இச்சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## விமானக் குண்டு வீச்சினால் சில கிராமங்கள் அழிவு

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட விமானக் குண்டு வீச்சினால் சில கிராமங்கள் முற்றாக அழிந்திருப்பதோடு கோடிக் கணக்கில் சேதமேற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகிய கிராமப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டிடங்கள், தேவாலயங்கள் நிர்மூலமடைந்தும் சேதமடைந்துமுள்ளதாகத்தெரியவருகிறது.

தற்போது அப்பகுதிகளில் மேலும் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசிவருவதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட சேத விவரங்களை உடனடியாகச் சேகரிக்க முடியாதிருப்பதாகவும் அப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் 38

### வேலணையில்...

உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த அகதிகள் குடும்பத்தில் உள்ள லில்லி மலர் அருள் சிங்கம் (25) என்ற திருமணமான பெண்மணியே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவர். 19

### முகாம்...

நலன்களைக் கவனிக்க விசேட மருத்துவ சேவை ஒன்று சுகாதார அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு பெரியாஸ்பத்திரி, அநுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரி என்பவற்றில் இந்தச் சேவை ஏற்படுத்தபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில் புலிகளின் தாக்குதல்களால் அதிகமான படையினர் காயமடைந்துள்ளதாலேயே இந்தச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

### கட்டைக்காட்டுப்...

ரின் வாகனம் ஒன்று சேதமானது.

ஆறு பொம்மர்கள், 4 அவ்ரோ, வை -12, நான்கு ஹெலிக்கப்டர்கள் என்பன மாறிமாறித் தாக்குதல்களை நடாத்தின.

முற்பகல் தொடக்கம் மாலை வரை தாக்குதல் உக்கிரமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு நோக்கி படையினர் முள்ளியான், புல்லாவெளி ஊடாக முன்னேற முயன்றபோதே சண்டை ஆரம்பித்தது.

நேற்றுப் பகல் 2-30 மணியளவில் ஆறு கவசவாகனங்களில் படையினர் முன்னேற முயன்றபோது புலிகளின் தாக்குதலால் ஒரு கவசவாகனம் சேதமடைந்தது. 97

### அவசர கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிறு காலை 10 மணியளவில் பாலம் பொதுப்பணிமன்றத்தில் நடைபெறவுள்ளதால் சகல உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### பிரிட்டிஸ்...

ளக்கூடாதெனவும் பிரிட்டிஸ் அரசு அறிவித்துள்ளது

பிரிட்டிஸ் தூதரகத்தில் நடைபெறும் விருந்துபசாரங்களிலும் அரசியல் வாதிகளுக்கு இடமளிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. 33

### ஆனையிறவு...

டனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கைகளில் நேற்று விடுதலைப் புலிகள் அதிகாலை முதல் கடும் தாக்குதல்களை ஆனையிறவு முகாம் மீது தொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பள விடுதிப்பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தி காவலரண்களுக்கு அருகில் நெருங்கியுள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இரவிரவாக விமானத் தாக்குதல்கள் மத்தியிலும் புலிகள் காவலரண்களை நோக்கி முன்னேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 79

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ளஅச்சகத்தில் 28.07·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.